பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆனி 31 | செவ்வாய்க்கிழமை | 15.05.2025 | அதிர்வு 345

பழம் பறிக்கச் சென்ற

## இளைஞர் ஒருவர் சுட்டுப் படுகொலை

மீரிகமவில் அனுமதியின்றி காணி ஒன்றினுள் தூரியன் பழம் பறிக்கச் சென்ற ஒருவர் சுட்டுப் படுகொலை 06

## போர்க்கால பிரபல அறிவிப்பாளர் சத்தியா காலமானார்!



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் “புலிகளின் குரல்” வானொலியின் பிரபல அறிவிப்பாளராகச் செயற்பட்ட சத்தியா (சிவசுப்பிரமணியம் ஞானகரன்) மாரடைப்பால் காலமானார்.

1990 ஆம் ஆண்டில் புலிகளின் வானொலி தொடங்கி முதலாவது செய்தி ஒலிபரப்பாகிய போது “புலிகளின்குரல் - செய்திகள் வாசிப்பவர் சத்தியா” என்று செய்தி வாசித்தவர் அவர்.

புலிகளின் குரல் வானொலியில் செய்தி ஆசிரியராகவும், செய்தி வாசிப்பாளராகவும் 2003 ஆம் ஆண்டு வரையில் அவர் செயற்பட்டிருந்தார்.

அவருடைய செய்தி வாசிப்புப் பாணியை வைத்து செய்தியின் கனதி தொடர்பில் மக்கள் உணரக்கூடிய அளவுக்கு அவருடைய அறிவிப்பு தனித்துவம் பெற்றிருந்தது.

நிதர்சனம் நிறுவனத்தில் 06

# அடுத்த தேர்தலுடன் சஜித்தின் கட்சி ‘அவுட்’

## ஆமாம் போடுபவர்கள் மாத்திரமே தற்போது எஞ்சியுள்ளனர் என்று பொன்சேகா விளாசல்

அடுத்த தேர்தலில் எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பத்து இலட்சம் வாக்குகளை மட்டுமே பெறும் என்றும், இது முன்னைய தேர்தல்களில் பெற்ற வாக்குகளை விட மிகக் குறைவாக இருக்கும் என்றும் முன்னாள் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார். 06



# புதுக்குடியிருப்பில் கோர விபத்து! குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபப் பலி!!

## இரு இளைஞர்கள் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்





முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு – உடையார்கட்டு பிரதான வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்தில் ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் ஒருவரும், மற்றைய மோட்டார் 06




மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட மாகாண சபைகள் இப்போது இல்லை. அதனால் எல்லா விடயங்களுக்கும் மாகாண ஆளுநர்களிடமேயே செல்ல வேண்டிய நிலைமை.

அந்த வரிசையில் இப்போது புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், நகர பிதாக்கள், மேயர்கள் நேரடியாக தத்தமது மாகாண ஆளுநர்களை மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேசி வருகிறார்கள்.

அந்த வரிசையில் சாவகச்சேரி நகர சபையின் புதிய பிரதிநிதிகள் ஆளுநரை நேற்று சந்தித்தனர். இதற்கான ஒழுங்குகள் நகர சபையின் நிர்வாகிகளால் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு கட்சியில் இருந்தும் ஒரு பிரதிநிதியை அழைத்துச் செல்வதாக ஏற்பாடு.

நகர சபையின் தற்போதைய தலைவர் சைக்கிள் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். ஆயினும் அவர் அந்த கட்டமைப்பில் அருந்தவபாலன் ஆசிரியரின் பிரதிநிதியாக நிறுத்தப்பட்டவர். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் 06



# தீவுப் பகுதிகளுக்குச் சுற்றுலா செல்லும் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உறுதியான நடவடிக்கை

## முன்னெடுக்கப்படும் என அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவிப்பு

(த.சுபேசன்)

குடாநாட்டில் தீவுப் பகுதிகளுக்குச் சுற்றுலாச் செல்லும் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அத்துடன், கடல்போக்குவரத்து சேவை வழங்கும் படகுகளின் தரம் மற்றும் முன்பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியன தொடர்பிலும் தொடர் கண்காணிப்பில் ஈடுபடுமாறு பொலிஸ் மற்றும் கடற்படையினருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

நேற்று (முன்தினம்) நெடுந்தீவைச் சேர்ந்த தனியார் ஒருவருக்கு சொந்தமான சுற்றுலாப் பயணிகளை ஏற்றும் சிறிய ரக படகில் நெடுந்தீவுக்கு சென்று திரும்பும் போது படகில் ஏற்பட்ட கோளாறு காரணமாக படகு மூழ்கியுள்ளது. பயணிகள் 12 பேர் மற்றும் 02 பணியாளர்கள் என 14 பேர் உயிராபத்து இன்றி மீட்கப்பட்டுள்ளனர்.

அந்தச் சுற்றுலாப் படகில் இருந்து வெள்ளைக்கொடி காட்டுவதனை அவதானித்த அவ்வழியே சென்ற நெடுந்தீவு தனியார் படகான சபரிஷ் படகின் பணியாளர்கள் விரைந்து செயற்பட்டு சேதமடைந்த படகில் இருந்தவர்களைக் கடலில் மூழ்காமல் காப்பாற்றியுள்ளனர். கடற்படையினரும் முழு வீச்சுடன் செயற்பட்டுள்ளனர். இவர்களுக்கு எனது நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடல் பயணத்தின் போது பின்பற்ற வேண்டிய முன்பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் உரிய அறிவுறுத்தல்கள் ஏற்கனவே விடுக்கப்பட்டுள்ளன. அவை முழுமையாக பின்பற்றப்பட வேண்டும். எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அதிகாரத்துக்காக அநுர அரசு எதையும் செய்யும்!

## அஜித் பி பெரேரா எம்.பி. சாடல்

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிள்ளையான் முன்கூட்டியே அறிந்திருந்தார் எனக் கூறும் தேசிய மக்கள் சக்தி அரசு, கிழக்கில் ஆட்சியமைப்பதற்கு அவரின் உதவியையும் பெற்றுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிள்ளையான் அனைத்து தகவல்களையும் அறிந்திருந்தார் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின்போது தெரிவித்தார்.

பிள்ளையான் அவ்வாறு தகவல்களை அறிந்து வைத்திருந்தால் அது பாரதூரமான விடயம். தகவல்கள் தெரிந்தும் அவற்றை வெளிப்படுத்தவில்லையெனில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும்.

ஆனால், கிழக்கில் ஆட்சியமைப்பதற்குப் பிள்ளையா




னுடனும் என்.பி.பி. காரர்கள் பேச்சு நடத்தினார்கள். சில சபைகளில் ஆதரவும் பெற்றுள்ளனர். கள்வர்கள், மோசடியாளர்கள் எனக் கூறிய தரப்புகளுடனும் இவர்கள் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளனர். இரகசிய வாக்கெடுப்பு நடத்தினர்.

அதிகாரத்துக்காக எதையும் செய்யத் தயார் என்ற விடயத்தையே இதன்மூலம் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.” – என்றார்.

# மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் முன்னாள் செயலாளர் உட்பட மூவருக்கு பிணை




லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் முன்னாள் பெண் உதவி செயலாளரையும் ஏனைய இரண்டு அதிகாரிகளையும் பிணையில் விடுதலை செய்யுமாறு கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி நேற்று திங்கள் கிழமை உத்தரவிட்டுள்ளார்.

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் சட்டவிரோதமாக வாகனங்களை பதிவு செய்தமை தொடர்பில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் முன்னாள் பெண் உதவி செயலாளரும் ஏனைய இரண்டு அதிகாரிகளும் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் நேற்று காலை கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரும் கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்த லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மேற்படி அதிகாரிகள் மூவரையும் கைது செய்தது. ஜி.எஸ் – 9164 என பதிவு செய்யப்பட்டுள்ள சொகுசு கார் ஒன்றே சட்டத்திற்கு புறம்பாக கொண்டுவரப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அதற்கமைய சம்பவம் தொடர்பில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் முன்னாள் உதவி ஆணையாளர் சூர்யாபிரியாங்கனிசிறிமான்ன, மோட்டார் வாகன திணைக்களத்தின் உதவி அபிவிருத்தி உத்தியோகத்தர் அபேசிங்க ஆராச்சிகே சஞ்சீவ குமார மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் ஹேரத் பத்திரனேலாகே இந்திக்க லக்ஷ்மன் ஹேரத் ஆகியோரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதான சந்தேகநபர்கள் நேற்று கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி ஜயதுங்கவின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் மற்றும் சந்தேகநபர்களுக்கு ஆதரவாக முன்னிலையான சட்டதரணியால் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களை கருத்திற்கொண்ட நீதவான் சந்தேகநபர்களுக்கு வெளிநாடு செல்ல பயணத்தடை விதித்து, தலா ஒருவருக்கு 20 லட்சம் ரூபா சரீர பிணையில் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டிருந்தார்.





# இலங்கை – இந்தோனேசிய நாடாளுமன்ற சங்கத்தை விரைவில் அமைப்பது தொடர்பில் கலந்துரையாடல்

இலங்கை – இந்தோனேசிய பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை விரைவில் அமைப்பது குறித்து இலங்கைக்கான இந்தோனேசியத் தூதுவர் திவி குஸ்டினா டொபிங் மற்றும் சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்கிரமரத்ன ஆகியோருக்கு இடையிலான சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற இச்சந்திப்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, அமைச்சு ஆலோசகரும், இந்தோனேசிய தூதரகத்தின் பிரதித் தூதுவருமான குமைை முமவயமைை மற்றும் இந்தோனேசிய தூதுரகத்தின் அமைச்சு ஆலோசகர் டுயடையட முாயசைலையா லுரயெைசவை ஆகியோரும் கலந்துகொண்டனர்.

விவசாயம், வர்த்தகம், சுற்றுலா மற்றும் மக்களுக்கு இடையேயான உறவுகள் ஆகிய துறைகளில் இலங்கைக்கும் இந்தோனேசியாவிற்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை இச்சந்திப்பில் பாராட்டிய சபாநாயகர், அவற்றை மேலும் வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

இங்கு போக்குவரத்துத் துறை பற்றியும் கலந்துரையாடப்பட்டதுடன், இந்தோனேசியாவின் ஜகார்த்தா நகருக்கு அருகில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பனோரமிக் ரயிலை இலங்கையின் போக்குவரத்துத் துறையின் மேம்பாட்டுக்குப் பயன்படுத்தக்கூடியதன் வாய்ப்புக்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், நாட்டில் இயங்கிவரும் சிறியமற்றும்நடுத்தர அளவிலான பத்திக் தொழில்துறை குறித்த அறிவைப் பரிமாறிக்கொள்ள வேண்டியதன் அவசியம் இருப்பதாக சபாநாயகர் இதன்போது குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் இலங்கை – இந்தோனேசிய நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தை விரைவில் அமைப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.




# சொத்து அறிக்கை சமர்ப்பிக்காத அரச அதிகாரிகளுக்கு அபராதம்

சொத்து மற்றும் பொறுப்புக்கூறல் அறிக்கைகளைச் சமர்ப்பிக்காத அரச அதிகாரிகளிடமிருந்து, அபராதம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 30 ஆம் திகதிக்கு முன்னர் சொத்துக்கள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கைகளைச் சமர்ப்பிக்காத அரச அதிகாரிகளின் சம்பளத்தில், ஒரு நாளைக்கு முப்பதில் ஒரு பங்கை அறவிட நடவடிக்கை எடுக்குமாறு, அனைத்து அரசு நிறுவனத் தலைவர்களுக்கும் லஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அறிவித்துள்ளது.



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# இலங்கை மத்திய வங்கியின் பிரமிட் எதிர்ப்பு தேசிய வாரம்

தடை செய்யப்பட்ட பிரமிட் எதிர்ப்பு தேசிய விழிப்புணர்வு வாரம் நேற்று ஆரம்பமானது.

“பெருங்கவலையின் உச்சகட்டம் – சூழ்ச்சியான பிரமிட் திட்டம்“ எனும் தொனிப்பொருளில் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களத்தினால் இதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், முப்படையினர், சிவில் பாதுகாப்பு அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், அரச ஊழியர்கள் உள்ளிட்ட அனைவரும் இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக தெளிவூட்டப்படவுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் 6,172 பாடசாலைகள் மற்றும் 14,022 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் ஊடாக குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நிதி மோசடிகளிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு நிதியியல் கட்டமைப்பு தொடர்பில் உறுதிப்பாட்டை பேணுதல் இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்

எதிர்வரும் 18 ஆம் திகதி வரை பிரமிட் எதிர்ப்பு தேசிய வாரம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# கேல்பத்தர பத்மே – கமாண்டோ சலிந்த கைது செய்யப்பட்டனர் என தகவலில்லை

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு



பல்வேறு திட்டமிட்டக் குற்றச்செயல்களுடன் தொடர்புடையதாக கூறப்படும் கேல்பத்தர பத்மே மற்றும் கமாண்டோ சலிந்த உள்ளிட்ட சிலர் மலேசியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர் என இதுவரை இராஜதந்திர ரீதியிலான எந்தவித தகவல்களும் பாதுகாப்பு பிரிவுக்கு கிடைக்கப்பெறவில்லை என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதயகுமார வுட்லர் தெரிவித்தார்.

ஏற்கனவே மலேசியாவில் கைது செய்யப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட 26 சந்தேக நபர்கள் தொடர்பில் ஆராய பொலிஸ் குழுக்கள் மலேசியா மற்றும் தாய்லாந்துக்கு சென்றுள்ளதாக தெரிவித்த அவர் குறித்த பெயர் பட்டியலில் கேல்பத்தர பத்மே மற்றும் கமாண்டோ சலிந்த ஆகியோரின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என தெரிவித்தார்.

சஞ்சீவ குமார சமர ரத்ன என்னும் கனேமுல்ல சஞ்சீவ படுகொலை செய்யப்பட்டமை உள்ளிட்ட பல குற்றச் செயல்களுடன் நேரடியாக தொடர்புடையவர் என குற்றஞ்சாட்டப்பட்டு சர்வதேச சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மனுதின பத்மசிரி பெரேரா என்னும் கேல்பத்தர பத்மே கமாண்டோ சலிந்த உள்ளிட்ட சிலர் அண்மையில் மலேசியாவில் வைத்து அந்நாட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என தகவல் வெளியாகியிருந்தன.

இந்த விடயம் தொடர்பில்நேற்று திங்கள் கிழமை கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளரிடம் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த காலங்களில் இடம்பெற்றதாகக்கூறப்படும் குற்றச்செயல்கள் தொடர்பில் தற்போது குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசேட விசாரணைகளை ஆரம்பித்திருந்தது. இந்நிலையில் திட்டமிட்டக் குற்றச்செயல்களுடன் தொடர்புடையதாக கூறப்படும் இலங்கைச் சேர்ந்த இருவர் மலேசியாவில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறும் கடந்த 11 ஆம் திகதி மலேசிய பாதுகாப்பு பிரிவினரால் குற்றப்புலனாய்வுத்திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய அவர்களில் 20 வயதுடைய ஒருவர் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் மலேசியாவின் குடிவரவு குடியகல்வு சட்டத்துக்கு ஏற்ப சந்தேகநபரை நாட்டுக்கு அழைத்து வர உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையதாக கூறப்படும் 29 பேருடைய பெயர் பட்டியலை மலேசியா பொலிஸார் எமக்கு அனுப்பியுள்ளனர். இவர்கள் ஏதேனும் குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டுள்ளார்களா என்பது தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம், அரச புலனாய்வு பிரிவு மற்றும் குற்றச் செயல்களை பதிவு செய்யும் பிரிவு ஆகியன விசாரணைகளை ஆரம்பித்துள்ளன. இதன் ஊடாக கிடைக்கப்பெறும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் இரு விசாரணை குழுக்கள் மலேசியா மற்றும் தாய்லாந்துக்கு அனுப்பட்டுள்ளன.

இந்த நாட்களில் பல்வேறு திட்டமிட்டக் குற்றச்செயல்களுடன் தொடர்புடையதாக கூறப்படும் கேல்பத்தர பத்மே மற்றும் கமென்டோ சலிந்த உள்ளிட்ட சிலர் மலேசியாவில் கைது செய்யப்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்களில் செய்திகள் பகிரப்பட்டு வருகின்றன. எனினும் சர்வதேச பொலிஸார் இவ்விடயம் தொடர்பான எவ்வித உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களையும் வழங்கவில்லை.” என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அல்லது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் அல்லர் அவர்.

அவரையும் சபையில் ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகளையும் ஆளுநரைச் சந்தித்த அணியில் பார்க்க முடிந்தது. ஈ.பி.டி.பி. பிரதிநிதி கூட இருந்தார். ஆனால் சாவகச்சேரி நகர சபையில் சைக்கிள் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற காங்கிரஸ் வேட்பாளர்கள் வேறு யாரையும் காணவில்லை. என்ன விடயம் என்று தேடிப்பார்த்தேன்.

ஆளுநர் பதவி என்பது ஒற்றையாட்சியின் கீழான ஓர் அதிகார நிலையாம். அதனை ஏற்க முடியாது. ஆகவே அவரை (ஆளுநரை) சந்திக்கப் போகத் தேவை இல்லை என்று கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவர் அடித்து - இறுக்கமாக - கூறினாராம். அதனால் சைக்கிள் தரப்பில் எவரும் சந்திப்புக்குப் போகவில்லை.

நல்ல - ஒருநிலைபட்ட - கொள்கை தான். ஆனால் நாளைக்கு மாகாண சபைத் தேர்தல் நடந்து, அதில் வெற்றி பெற்றால், ஒற்றையாட்சியை அடையாளப்படுத்தும் ஆளுநரின் கீழான அந்த சபைக்கு சைக்கிள் சின்னக்காரர்கள் போகாமல் விடுவார்களா? அதே கொள்கையின் அடிப்படையில் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடாமலும் விடுவார்களா? எல்லாம் கஜேந்திரமோட் சத்தில்தான் தெரியும்...!

*　*　*

கடந்த பொதுத் தேர்தல் சமயத்தில் ரெலோவின் பேச்சாளர் - யாழ். மாவட்ட வேட்பாளர் சுரேந்திரன் குருசாமிக்கு எதிராக பொதுவெளியில் தாறுமாறாக வாங்கித் தள்ளினார் அக்கட்சியின் யாழ். பிரமுகரான விந்தன் கனகரட்ணம்.

உங்கள்பகிரங்கக்குற்றச்சாட்டுகளுக்கு எதிராக சுரேந்திரன் நீதிமன்றுக்குச் சென்றால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது, 'அதற்கு அஞ்சேன், தயங்கேன், எதிர்கொள்வேன்' என்று விந்தன் கனகரட்ணம் கூறியிருந்தார்.

இப்போது யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் விந்தன் கனகரட்ணத்திற்கு எதிராக சுரேன் குருசாமி மான நஷ்ட வழக்குத் தொடர்ந்திருக்கின்றார். நான்கு வழக்குத் தவணைகள் சென்றுவிட்டன. ஆனால் விந்தன் கனகரட்ணம் நீதிமன்ற அழைப்பாணையை ஏற்கவும் இல்லை, நீதிமன்றுக்குச் செல்லவும் இல்லை.

அந்த வழக்கு அவர் இல்லாமலேயே ஒரு தலைப்பட்சமாக விசாரணை செய்யப்படக்கூடிய சூழ்நிலை உருவாகி வருகின்றது.

இதற்கிடையில் ரெலோவை விட்டு வெளியேறிய விந்தன் கனகரட்ணம், இப்போது தமிழரசுக் கட்சியில் சேர்ந்து விட்டார்.

எதிராளி இல்லாமல் ஒருதலைப்பட்சமான விசாரணைக்கு வழக்குச் செல்லுமானால் விரைவில் தீர்ப்பு வந்துவிடும் என்று எதிர்பார்க்கலாம்.

## இளைஞர் ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்டுள்ளார்.

இந்தத் துப்பாக்கிச் சூடு, அந்தக் காணியின் பாதுகாப்பு அதிகாரி ஒருவரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று மதியம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 22 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## போர்க்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மாதாந்தம் வெளியாகிய ஒளிவீச்சு காணொளிச் சஞ்சிகையில் தொடர்ந்து மாதாந்தம் இடம்பெற்ற "சமகாலப் பார்வை" என்ற நிகழ்ச்சிக்கான குரல் வழங்குபவராக நீண்டகாலமாக அவர் செயற்பட்டார்.

நிதர்சனம் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட தமிழீழத் தேசியத் தலைவரின் நேர்காணலுடன் ஒளிபரப்பாகிய "விடுதலைத் தீப்பொறி" என்கின்ற நிகழ்ச்சியின் குரல் வழங்குநராகவும் அவர் செயற்பட்டார்.

தேசியத் தலைவரின் 50ஆவது பிறந்த நாளையொட்டி நிதர்சனம் நிறுவனம் தயாரித்த "தலைநிமிர்வு 50" என்ற ஆவணப்படம் உட்பட்ட ஏராளமான ஆவண வெளியீடுகளின் பிரதான குரல் தொகுப்பாளராகவும் அவர் புகழ் பெற்றிருந்தார்.

இடப்பெயர்வுக்கு முன்னர், நிதர்சனம் நிறுவனத்தினரை யாழ்ப்பாணத்தில் இரண்டு சந்தர்ப்பங்களிலும் பின்னர் முள்ளியவளையில் புலிகளின் குரல் வானொலி செயற்பட்ட 1998 ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் தேசியத் தலைவரால் அவர் மதிப்பளிப்பளிக்கப்பட்டார்.

புலிகளின் குரல் வானொலியில் ஒலிபரப்பாகிய வரலாற்றுத் தொடரான "காலச்சக்கரம்" என்ற நிகழ்ச்சியை எழுதித் தயாரித்து, மறைந்த கலைஞர் சங்கநாதனுடன் இணைந்து சத்தியா குரல் வழங்கியிருந்தார்.

விவசாயம் சார்ந்த கருப்பொருளை உள்ளடக்கிய "மண்முற்றம்" என்ற நிகழ்ச்சியை எழுதித் தயாரித்து அதில் அவர் குரல் வழங்கியும் இருந்தார்.

மக்களின் குரலாக ஒலித்த "ஊர் சுற்றும் ஒலிவாங்கி" என்ற நேர்காணல் நிகழ்ச்சியைப் புலிகளின் குரல் வானொலியில் அவர் தயாரித்திருந்தார்.

2003 ஆண்டிலிருந்து ஊடகத்துறையிலிருந்து ஒதுங்கிய அவர் பகுதி நேர ஆங்கில ஆசிரியராகவும் பின்னர் ஆசிரியராகவும் செயற்பட்டு வந்திருந்தார்.

அண்மையில் விபத்து ஒன்றில் சிக்கிக் காயமடைந்த அவர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்திருந்தார்.

இந்நிலையில் மாரடைப்பால் நேற்று அவர் காலமானார்.

அவரின் இறுதிக்கிரியை நிகழ்வு கிளிநொச்சி, வட்டக்கச்சியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறும்.

## புதுக்குடியிருப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களும் படுகாயமடைந்த நிலையில் மூங்கிலாறு ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். அவர்களில் உடையார்கட்டு, வெள்ளப்பள்ளம் பகுதியைச் சேர்ந்த 37 வயதான குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இளைஞர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் அதிக வேகத்துடன் பயணித்தது என்று சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## அடுத்த தேர்தலுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றியபோது இதனைத் தெரிவித்த அவர், மேலும் குறிப்பிடுகையில்,

"ஐக்கிய மக்கள் சக்தியின் பல சிரேஷ்ட உறுப்பினர்கள் மற்றும் ஆர்வலர்கள் ஏற்கனவே கட்சியை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

இது கட்சிக்குள் ஏற்பட்டுள்ள அதிருப்தியைக் குறிக்கின்றது.

முதலில் குமார வெல்கம வெளியேறினார். பின்னர் சம்பிக்க, ராஜித, தலதா மற்றும் பொன்சேகா ஆகியோர் வெளியேறினர்.

மிகவும் சிரமப்பட்டு உருவாக்கிய ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில், கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் ஒவ்வொரு முடிவையும் ஏற்றுக்கொண்டு, ஆமாம் போடுபவர்கள் மட்டுமே எஞ்சியுள்ளனர்.

இந்தநிலையில், அத்தகையவர்களுடன் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான பயணத்தை முன்னெடுப்பது கடினமான காரியம்." - என்றார்.





# மாபெரும் கட்டுமரம் வலித்தல் போட்டி

அமரர் பொன்னையா செல்லத்துரை அவர்களின் 16 ஆவது ஆண்டு ஞாபகார்த்தமாக கட்டப்பட்ட குடத்தனை வடக்கு கடற்றொழிலாளர் சந்தைக் கட்டடத்தொகுதி திறப்புவிழா வினை சிறப்பிக்கும் முகமாக பாரம்பரிய விளையாட்டான மாபெரும் கட்டுமரம் வலித்தல் போட்டி நேற்று இடம்பெற்றது.

நேற்று காலை 08.30 மணியளவில் குடத்தனை வடக்கு கடற்கரையில் இப் போட்டி இடம்பெற்றது.

அமரர் பொன்னையா செல்லத்துரை அவர்களின் 16 ஆவது ஆண்டு ஞாபகார்த்தமாக இரண்டு மில்லியெண் பெறுமதியில் கட்டப்பட்ட குடத்தனை வடக்கு கடற்றொழிலா ளர் சந்தைக்கட்டடத்தொகுதி திறப்புவிழா இடம்பெற்றது.

கட்டுமரம் வலித்தல் போட்டியில் வெற்றி பெற்றவருக்கு முதலாம் பரிசாக 25 000 ரூபாவும், இரண்டாம் பரிசாக 15 000 ரூபாவும் வழங்கப்பட்டது. போட்டி விதிமுறைகளாக மணல்காடு தொடக்கம் நாகர்கோவில் வரை வசிப்பிடமாக கொண்ட கட்டுமரம் வைத்திருபவர்கள் மாத்திரம் பங்கு பற்ற முடியும். ஒரு கட்டுமரத்தில் ஒருவர் மாத்திரம் போட்டியாளா ராக பங்கு பற்ற முடியும் என்ற நிபந்தனை அடிப்படையில் பாரம்பரிய கட்டுமரப் போட்டி இடம்பெற்றது.










# வீதியைப் புனரமைத்துத் தருமாறு வலியுறுத்தி வீதிக்கு இறங்கினர் ரதெல்ல தோட்ட மக்கள்!

(பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)

நுவரெலியா, நானுஓயா ரதெல்ல கீழ் பிரிவு தோட்ட மக்கள், தங்கள் தோட்டத்தில் இருந்து தலவாக்கலை செல்லும் இரண்டு கிலோமீட்டர் தூரங்கொண்ட வீதி பல வருட காலமாக புனரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாக காணப்படுவதைச் சுட்டிக்காட்டி, அதனை உடனடியாகச் சீரமைத்து தருமாறு கோரி நேற்றுக் காலை வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தத் தோட்டத்தில் 300 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அந்த மக்கள் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலையில் இப்பாதை காணப்படுவதாகத் தெரிவித்து இப்பாதையை உடனடியாக சீரமைத்து தருமாறு கோரி நேற்றுக் காலை 8 மணி முதல் 11 மணி வரை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஐந்நூறுக்கும் மேற்பட்ட மக்கள் பதாதைகளை ஏந்தி, கோஷங்கள் எழுப்பி கோரிக்கைகளை முன்வைத்தனர்.

கடந்த அரசாங்கத்தில் 2020 ஆம் ஆண்டு புனரமைப்பு பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகளை ஆரம்பிப்பதற்கு அடிக்கால் நட்டப்பட்டது. வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அது இடையில் கைவிடப்பட்டுள்ளது.

தற்போது இப்பாதையின் ஊடாகச் செல்ல முடியாத நிலையில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், கர்ப்பிணி தாய்மார்கள், வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள, தொழிலுக்கு செல்பவர்கள் என பலரும் ஒவ்வொரு நாளும் பல்வேறு சிரமத்துக்கு முகம் கொடுக்க வேண்டிய இக்கட்டில் உள்ளனர்.

இப்பாதையை உடனடியாகப் புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்திய பின்னர் அவர்கள் கலைந்து சென்றனர்.






# வெளிநாட்டிலிருந்து வந்தவர் படுக்கையிலேயே உயிரிழப்பு

(எஸ்.ரகுதீஸ்)

பிரான்சில் இருந்து வருகைதந்து மயிலிட்டியில் தங்கியிருந்த குடும்பஸ்தர் ஒருவர் படுக்கையில் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெயரஞ்சன் (வயது 54) என்பவராவார்.

மனைவி பிள்ளைகள் பிரான்சில் வசித்துவரும் நிலையில் மூன்று மாதத்திற்கு முன்னர் இலங்கை திரும்பிய அவர் மயிலிட்டியில் தங்கியிருந்த போது படுக்கையில் உயிரிழந்த நிலையில் நேற்று திங்கள் கிழமை சடலமாக காணப்பட்டார்.

சடலம் தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு



உத்தரவிட்டார். சாட்சிகளை பலாலிப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரசின் அலப்பறை

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மாற்றீடு இல்லாமல் அடியோடு முழுமையாக ஒழிக்க வேண்டும் என்று எதிரணியில் இருந்த போது பிரசாரம் செய்து, அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசு, இப்போது அதே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை வைத்து நடத்தும் அலப்பறை பற்றிய செய்திகள் தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அந்த வரிசையில் இப்போது ஒன்று வெளிவந்துள்ளது.

விமானப் போக்குவரத்துத் தொடர்பான துறையில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் 21 வயது மாணவனான முகமது ரிஃபாய் முகமது சுஹைல் என்பவரை ஒன்பது மாதங்களுக்கு முன்னர் பொலிஸார் கைது செய்தனர் - அடையாள அட்டையை வைத்திருக்கவில்லை என்ற குற்றச்சாட்டில்.

பின்னர் கல்கிஸை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவில் விடுவிக்கப்பட்ட அவர் மீண்டும் மாவனல்லையில் வைத்து பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார் - இஸ்ரேலிய எதிர்ப்பு ஸ்டிக்கரை ஒட்டியமைக்காக.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் அவரைத் தடுத்து வைத்திருப்பதற்கான ஆதாரங்கள், சான்றுகள் தங்களிடம் இருப்பதாக அப்போது கூறிய பொலிஸார் இப்போது ஒன்பது மாதங்கள் கழித்து கடந்த புதன் கிழமை கல்கிஸை நீதிமன்றத்திற்கு வந்து சந்தேக நபருக்கு எதிராக எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை என்றும், அவருக்கு பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை இல்லை என்றும் கூறியிருக்கின்றனர்.

பொலிஸாரின் இந்த நடத்தை குறித்து நீதிவான் ஹேமாலி ஹல்பாண்டேனியா தனது கடுமையான அதிருப்தியை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

ஆதாரங்கள் இல்லை என்றால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் கீழ் ஏன் அவர் இவ்வளவு காலம் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார் என்று நீதிவான் கேள்வி எழுப்பினார்.

"சந்தேக நபர் கைது செய்யப்பட்டு இந்த நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார். அவர் வீட்டிற்கு செல்லும் வழியில் மாவனல்லையில் மீண்டும் கைது செய்யப்பட்டார். ஆனால் அவர் மீண்டும் தெஹிவளையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டார் என்று இங்கு பொலிஸார் சுட்டிக் காட்டுவது ஏன்? இது மிகவும் நீதி, நியாயமற்ற நடவடிக்கை" என்று நீதிவான் குறிப்பிட்டார்.

"பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சந்தேகநபரை எப்படி கைது செய்வது என்று தெரிந்த பொலிஸாருக்கு, சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் இல்லாமல் இந்த நீதிமன்றத்துக்கு அத்தகைய சந்தேகநபருக்கு பிணை வழங்க அதிகாரம் இல்லை என்பது ஏன் தெரியாமல் போனது? ஆகவே 15 ஆம் திகதியன்று (இன்று) இது தொடர்பில் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலோடு நீதிமன்றில் பிரசன்னமாகுங்கள்" - எனப் பொலிஸாருக்கு நீதிவான் காட்டமான உத்தரவு ஒன்றையும் வழங்கினார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை வைத்துக் கொண்டு இந்த அரசு பண்ணும் அலப்பறையும் தாங்க முடியாமல்தான் இருக்கின்றது.









# வீதி அபிவிருத்தி அதிகாரசபை மட்டக்களப்பு அலுவலகத்தை முற்றுகையிட்டு தற்காலிக ஊழியர்கள் நேற்றுப் போராட்டம்!

(வாலகிருஸ்ணா)

மட்டக்களப்பு மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்தை முற்றுகையிட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தற்காலிக நிலைய ஊழியர்கள் நேற்றுப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கடந்த பத்து வருடத்திற்கும் மேலாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வீதி சீரமைப்பு ஊழியர்களாக பணியாற்றும் தற்காலிக நிலை ஊழியர்களே இந்தப் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் தங்களை இணைத்துக்கொள்ளும்போது எந்த கல்வித்தகமையும் கோராத நிலையில், இன்று கா.பொ.த.சாதாரண தரம் கற்றிருந்தால் மட்டுமே தாங்கள் நிரந்தர நியமனத்திற்குள் உள்வாங்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மட்டக்களப்பு மாவட்ட தலைமைக் காரியாலயத்தில் கா.பொ.த. சாதாரண தரம் உள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தற்காலிகக் கடமையாற்றும் ஊழியர்களுக்கான நேர்முக தேர்வு நடைபெற்றுவரும் நிலையிலேயே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வீதிகளில் நெருப்பு வெயிலுக்கும் மத்தியிலும், மழைகாலத்திலும் கடுமையான பணிகளை முன்னெடுத்துவரும் தமக்கான நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கு கல்வி சான்றிதழ் என்ற விடயத்தைக் கொண்டுவந்து தமது உரிமையினை பறிக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது ஊழியர்களினால் குற்றஞ்சாட்டப்பட்டது.

கல்வித்தரம் கோரப்படாத நிலையில் தாங்கள் தற்காலிக நிலையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குள் உள்வாங்கப்பட்டு 10வருடத்திற்கு மேலாகப் பணியாற்றிய நிலையில் இன்று கல்விச்சான்றிதழ் கொண்டுவாருங்கள், நிரந்தர நியமனம் தருகின்றோம் என்று கூறுவது எங்களது வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கும் செயற்பாடு எனவும் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

30ஆயிரம் ரூபா சம்பளமே மாதந்தம் பெற்றுவரும் தாங்கள் பொருளாதார நெருக்கடி நேரத்திலும் தாங்கள் பல கஷ்டங்களுக்கு மத்தியில் விடுமுறையும் இல்லாமல் கடமையாற்றிக்கொண்டிருக்கும் நிலையிலும் தமக்கான நிரந்தர நியமனத்தினை வழங்குவதற்கு பின்னடிக்கும் செயற்பாடுகளை கைவிட்டு அனைவரையும் நிரந்தர நியமனத்திற்குள் உள்ளீர்ப்பதற்கான செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் எனவும் ஊழியர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த போராட்டம் நடைபெறும் இடத்திற்கு வருகைதந்த வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உயர் அதிகாரிகள், ஊழியர்களின் இந்தக் கோரிக்கை தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் அமைச்சின் கவனத்திற்கு கொண்டு செல்வார்கள் எனத் தெரிவித்தனர்.













# பாலியாறு நீர்த் திட்ட நடைமுறைப்படுத்தல் தொடர்பில் அமைச்சர்கள் தலைமையில் ஞாயிறன்று கள விஜயம்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட வெள்ளாங்குளம் கிராமத்தில் பாலியாறு குடிதண்ணீர்த் திட்டம் நடைமுறைபடுத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக ஒருங்கிணைந்த கள விஜயம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது.

இந்தக் கள விஜயதில் வனவள மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சர் மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், நீர்ப்பாசன பணிப்பாளர் மற்றும் அரச உயர் அதிகாரிகள், திணைக்களத் தலைவர் கள், கிராம் மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அரச திணைக்கள அதிகாரிகளால் திட்டம் தொடர்பான விளக்கம் அமைச்சர் உள்ளிட்ட குழுவினருக்கு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து திட்டம் நடை முறைப் படுத்தப்படும் பிரதேசத்தை அமைச்சர் குழுவினர் சென்று பார்வையிட்டனர்





# க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை மீள்பரிசீலனை செய்வதற்கு விண்ணப்பிக்கலாம்

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை மீள்பரிசீலனை செய்வதற்கான விண்ணப்பங்கள் நேற்று முதல் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

நேற்று முதல் எதிர்வரும் 28ஆம் திகதி வரை பரீட்சை பெறுபேறுகளை மீள்பரிசீலனை செய்வதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.



2024 கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் கடந்த 10 ஆம் திகதி நள்ளிரவு வெளியிடப்பட்டன.

கடந்த வருடத்திற்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சை கடந்த மார்ச் மாதம் நடைபெற்றது.

இதில் 474,147 பரீட்சார்த்திகள் தோற்றியதுடன் 398,182 பேர் பாடசாலை பரீட்சார்த்திகளாவர்.

இம்முறை வெளியாகியுள்ள கல்விப் பொதுத்தராதர சாதாரணப்பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய 237,26 பேர் உயர்தரத்திற்கு தகுதி பெற்றுள்ளனர்.

# வவுனியா இலுப்பையடி வீதியோர வியாபார நிலையங்கள் மாநகர சபையால் அகற்றல்; வியாபாரிகள் கடும் எதிர்ப்பு













(கி.வசந்தன்)

வவுனியா மாநகர சபையால் இலுப்பையடி வீதியோர வியாபார நிலையங்கள் அகற்றப்பட்ட போது அப்பகுதியில் வீதியோர வியாபாரிகளுக்கும் மாநகர சபையினருக்கும் இடையில் முரண்பாடுகள், முறுகல்கள் ஏற்பட்டன.

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் அமைந்திருந்த வீதியோர கடைகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கை வவுனியா மாநகர சபையால் நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்டது.

அந்த இடத்திலிருந்து வேறு மாற்று இடத்திற்கு சென்று வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஏற்கனவே மாநகரசபையால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அகற்றப்படாத வர்த்தக நிலையங்களை அகற்றும் நடவடிக்கையை மாநகரசபை முன்னெடுத்தது. இதன்போது வீதியோர வர்த்தக நிலைய உரிமையாளர்களால் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இச்சமயம் வர்த்தகர்களுக்கும் மாநகரசபை உறுப்பினர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இதனையடுத்து அவ்விடத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டனர். வீதியோரமாக இருந்த வர்த்தக நிலையங்கள் முழுமையாக இதன்போது அகற்றப்பட்டனர். பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் நிறுத்தப்பட்டிருந்தனர்.

# திருமலை இரத்தினசிங்கப் பிள்ளையார் ஆலய மகோற்சவம் இன்று கொடியேற்றதுடன் ஆரம்பம்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ இரத்தினசிங்கப் பிள்ளையார் ஆலய வருடாந்த பிரம்மோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகி, தொடர்ச்சியாக பத்து நாள்கள் இடம்பெறும். வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை இரதோற்சவமும், மறுநாள் வியாழக்கிழமை ஆடி அமா வாசையன்று தீர்த்த உற்சவமும் இடம் பெறவுள்ளன.

தினமும் காலை 6.00 மணிக்கு அபிஷேகம், 7.00 மணிக்கு மூலஸ்தான பூசை, 8.00 மணிக்கு தம்ப பூசை இடம்பெற்று தொடர்ந்து வசந்த மண்டப பூசையுடன் காலை திருவிழா நிறைவு பெறும். பிற்பகல் 3.00 மணிக்கு அபிஷேகம், தொடர்ந்து மூலஸ்தான பூசைகள் நடைபெற்று, தொடர்ந்து தம்ப பூசை, வசந்த மண்டப பூசையுடன் இரவு 7.30 மணிக்கு அன்றைய திருவிழா நிறைவுபெறும்.





# புத்தளம் அக்கரயணத்தீவுப் பகுதி புதருக்குள் இருந்து 1330 கிலோ பீடி இலைகள் கடற்படையினரால் மீட்பு!

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

புத்தளம் அக்கரயணத்தீவு பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையில் சட்ட விரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டவை எனச் சந்தேகிக்கப்படும் சுமார் 1330 கிலோ மற்றும் 300 கிராம் பீடி இலைகள் அப்பகுதியில் உள்ள ஒரு புதரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன

கடந்த சனிக்கிழமை புத்தளம் அக்கரயணத்தீவு பகுதியில் வடமேற்கு கடற்படை கட்டளையின் இலங்கைக் கடற்படை கப்பல் தம்பபண்ணி நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையில் போது அந்த பகுதியில் உள்ள ஒரு புதரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகத்திற்கிடமான 39 பொதிகைள் ஆய்வு செய்யப்பட்டன. சட்ட விரோதமாக நாட்டிற்குள் கொண்டுவரப்பட்டு கடத்தல்காரர்களால் மறைத்து வைக்கப்பட்டவை எனச் சந்தேகிக்கப்படும் சுமார் 1330 கிலோ மற்றும் 300 கிராம் பீடி இலைகள் கடற்படையினால் கைப்பற்றப்பட்டன

கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் கலால் அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.







# வவுனியா - கூமாங்குளத்தில் மரணித்தவர் மாரடைப்பாலேயே மரணம் அடைந்தாராம்

## சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை வெளியாகியது!

(கி.வசந்தன்)

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மரணித்தவர் மாரடைப்பு காரணமாகவே மரணமடைந்துள்ளார் என சட்ட வைத்திய அதிகாரி எம்.டீ.ஆர்.நாயக்கரத்னே நேற்றுத் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வவுனியா, கூமாங்குளம் பகுதியில் மோட்டர் சைக்கிளில் சென்ற நபர் ஒருவர் வீதியில்விழுந்து மரணமடைந்திருந்தார். இதன்போது அப்பகுதியில் பயணித்த போக்குவரத்துப் பொலிஸாரே இந்த மரணத்திற்குக் காரணம் எனத் தெரிவித்த ஒரு குழுவினர் குழப்பத்தில் ஈடுபட்டமையுடன், பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

மரணம் தொடர்பில் விசாரணை செய்யச் சென்ற பொலிஸெ மீது அப் பகுதியில் குழுமி இருந்தவர்கள் தாக்குதல் நடத்தினர் எனவும், அதில் 5 பொலிஸார் காயமடைந்தனர் எனவும், பொலிஸாரின் இரு மோட்டர் சைக்கிள்கள் மற்றும் கப் ரக வாகனம் ஒன்றும் சேதமடைந்துள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், அப்பகுதியில் மரணித்த இராமசாமி அந்தோணிப் பிள்ளை (வயது 58) என்பவரின் உடற் கூற்று பரிசோதனை வவுனியா வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரி எம்.டீ.ஆர்.நாயக்கரத்னே முன்னிலையில் இடம்பெற்றது.

இதன்போது, மரணித்தவரின் உடலில் புதிய காயங்கள் எதுவும் இல்லை எனவும், வலது காலில் பழைய வடுக்கள் காணப்படுகின்றன எனவும், இதயத்தின் முன் புறப்பகுதியில் கடுமையான இரத்த உறைவு உருவாக்கம் காணப்படுகின்றது எனவும், இதயத்தின் தசைப்பகுதி மற்றும் இரத்த மாதிரி கொழும்புக்கு இரசாயன பகுப்பாய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையுடன், மாரடைப்பு காரணமாகவே அவர் மரணமடைந்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.







# கூமாங்குளம் வன்முறைச் சம்பவம் தொடர்பில் பிரதேசசபை உறுப்பினர் உட்பட இருவர் கைது

(கி.வசந்தன்)

வவுனியா - கூமாங்குளம் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பில் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வவுனியா, கூமாங்குளம் பகுதியில் மோட்டர் சைக்கிளில் சென்ற நபர் ஒருவர் வீதியில் விழுந்து மரணமடைந்திருந்தார். இதன்போது அப்பகுதியில் பயணித்த போக்குவரத்துப் பொலிஸாரே இந்த மரணத்திற்குக் காரணம் எனத் தெரிவித்த ஒரு குழுவினர் குழப்பத்தில் ஈடுபட்டனர். பொலிஸ மீதும் தாக்குதல் மேற்கொண்டனர்.

மரணம் தொடர்பில் விசாரணை செய்யச் சென்ற பொலிஸ மீது அப்பகுதியில் குழுமி இருந்தவர்கள் தாக்குதல் நடத்தினர் எனவும், அதில் 5 பொலிஸார் காயமடைந்தனர் எனவும், பொலிஸாரின் இரு மோட்டர் சைக்கிள்கள் மற்றும் கப் ரக வாகனம் ஒன்று என்பன சேதமாக்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், மரணித்தவர் மாரடைப்பு காரணமாகவே உயிரிழந்தார் என சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை வெளியாகியுள்ளது.

இந்தப் பின்புலத்தில் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் வாக்கு மூலம் பெறுவதற்காக இருவரை அழைத்திருந்தனர்.

இருவரிடமும் வாக்குமூலம் பெற்ற பின்னர் அரச சொத்துக்களைச் சேதப்படுத்தியமை, மக்களை ஒன்று கூட்டியமை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறை ஏற்படுத்தியமை, உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில ஒருவர் தமிழ் மக்கள் கூட்டணியின் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் ஆவார். மேலதிக விசாரணைகளின் பின் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும் பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

# திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக் கூடம் திறந்து வைப்பு



(ஆதம்)

திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் சேவைகளை மேம்படுத்தி அப்பிரதேச மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையி வழங்கும் பொருட்டு அவ்வைத்தியசாலையில் புதிதாக சத்திர சிகிச்சைக்கூடமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த சத்திர சிகிச்சைக் கூடத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஏ.பி.மசூத் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சத்திர சிகிச்சைக் கூடத்தைத் திறந்து வைத்தார்.

இதன்போது பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம். மாஹிர், வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளர் சட்டத்தரணி கே.ஜெகசுதன் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போது பிராந்திய பணிப்பாளர் உரையாற்றுகையில் -

இந்த சத்திர சிகிச்சைக்கூடம் சுகாதார அமைச்சினதும் பொதுமக்களினதும் நிதியுதவியின் ஊடாக ஒழுங்கமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. சத்திர சிகிச்சைக் கூடம் இந்த ஆதார வைத்தியசாலையின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. சுகாதார சேவையில் அதன் பங்களிப்பு மிக முக்கியமானதாக உள்ளது.

இந்த சத்திர சிகிச்சைக் கூடத்துக்கு தேவையான பெறுமதிமிக்க உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக அண்மையில் இடம்பெற்ற தாதிய உத்தியோகத்தர் நியமனத்தின் போதும் அதிகமானவர்களை இங்கு நியமதித்துள்ளோம். அதிலும் விசேடமாக சத்திர சிகிச்சை கூடங்களில் வேலை செய்தவர்கள், விசேட பயிற்சி பெற்றவர்கள் என அனுபவமிக்க மிகவும் திறமையானவர்கள் உள்ளனர். அந்தவகையில் சத்திர சிகிச்சைக்கூடத்தின் சேவைகளை ஆரம்பிப்பதற்கு போதுமான வளங்கள் உள்ளன.

சுகாதார உதவியாளர் பற்றாக்குறை தொடர்பில் இங்கு பேசப்பட்டது. சுகாதார உதவியாளர்கள் 5 பேரை விரைவில் இவ்வைத்தியசாலைக்கு நியமிப்பதற்கு திட்டமிட்டுள்ளேன். அத்துடன் ஓரிரு மாதங்களில் அரசாங்கம் புதிதாக வைத்தியர்களுக்கு நியமனம் வழங்கவுள்ளது. அதிலும் திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கே கூடுதலானவர்களை நியமிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளேன்.

அத்துடன் குருதி சுத்திகரிப்பு பிரிவொன்றினையும் இங்கு திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே தற்போதுள்ள வளங்களைக் கொண்டு இந்த பிரதேச மக்களுக்கு முடியுமானளவு சேவையாற்றுவதற்கு சகலரும் முன்வர வேண்டும். - என்றார்.






# சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்று திருமலை நகரில் கையெழுத்துப் போராட்டம்

(எஸ்.கீதபொன்கலன்)

சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை பஸ்தரிப்பு நிலையம் முன்பாக நேற்று கையெழுத்துப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது “இன்னொரு அடக்குமுறை சட்டம் வேண்டாம், பயங்கரவாத தடைச் சட்டத்தை ரத்து செய்!”, “காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் இப்போதாவது நீதி வழங்கு!”, “அனைத்து தேசிய இனத்தவர்களுக்கும் சம உரிமைகளை உறுதிசெய்யும் புதிய அரசமைப்புக்காகப் போராடுவோம்!” உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இந்தஜ் கையெழுத்திடும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் முகமாக இக்கையெழுத்துப் போராட்டத்தில் அனைத்து இன மக்களும் அதிக எண்ணிக்கையில் கலந்து கொண்டு ஆர்வத்துடன் கையெழுத்திட்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த ஏற்பாட்டாளர்கள் –

யுத்தம் முடிவடைந்து 16 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்ட நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கும், அரசியல் படுகொலைகளுக்கு உள்ளானவர்களுக்கும் இன்னும் நீதி கிடைக்கவில்லை. அரசியல் கைதிகள், அரச படையினரால் கைப்பற்றப்பட்ட காணிகள் மற்றும் யுத்தத்தினால் ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்பீடு தொடர்பான பிரச்சுனைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. இனவாதத்தை முடிவுக்கு கொண்டு வருதல், பயங்கரவாத தடைச் சட்டம் போன்ற அடக்குமுறை சட்டங்களை ரத்து செய்தல் மற்றும் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வை வழங்குதல் உள்ளிட்டவற்றை மேற்கொண்டு இந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதாக தற்போதைய அரசாங்கம் தேர்தல் மேடையில் உறுதி அளித்தது. ஆனால் அந்த வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

பயங்கரவாத தடைச் சட்டத்தை ரத்து செய்வதாக உறுதியளித்து ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று அந்த அடக்குமுறை சட்டத்தை பயன்படுத்துகிறார்கள். இதற்கிடையில் வடக்கில் உள்ள மனிதப் புதைகுழிகளில் சிறு குழந்தைகளின் எலும்புக்கூடுகள்கூட கண்டுபிடிக்கப்படுகின்றன. இவர்கள் அனைவருக்கும் நீதி வழங்கப்பட வேண்டும். எனவே இதற்கு பரந்த அளவிலான பொது மக்களின் ஈடுபாடு தேவைப்படுகின்ற நிலையில் சம உரிமை இயக்கம் அதற்கு அரசியல் தலைமையை வழங்க தயாராக உள்ளது. சம உரிமை இயக்கத்தின் தொடக்கத்தில் இருந்தே இனவாதம் மற்றும் தேசிய ஒடுக்கு முறையை ஒழித்து அனைத்து இனத்தவர்களுக்கும் சம உரிமைகளை வழங்கும் அரசியல் தீர்வை அடைவதே எங்கள் குறிக்கோளாக இருந்து வருகிறது. இந்த முயற்சியில் எங்களுடன் இணையுமாறு உங்களை கேட்டுக் கொள்கின்றோம். – என அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.












# வடக்கில் ஆசிரியர்களுக்கான இடமாற்றத்தை தாமதமின்றி நடைமுறைப்படுத்தத் தீர்மானம்

வடக்கு மாகாண இடமாற்றக் கொள்கையை வினைத்திறனாக மாற்றியமைப்பதற்கும், ஆசிரியர் இடமாற்றங்களைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்துவதற்கும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் மற்றும் இலங்கை அதிபர் சேவைச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை ஆளுநர் செயலகத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

ஆசிரியர் இடமாற்றச் சபையில் பதிவு செய்யப்பட்ட இயங்குநிலையிலுள்ள தொழிற்சங்கங்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்க வேண்டும் எனவும், அனுமதியற்ற தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இடமாற்றச் சபையில் இடம்பெற்றிருந்தால் அதனூடாக வழங்கப்படும் இடமாற்றம் சட்டரீதியாக சவாலுக்கு உட்படுத்தப்படும் அபாயம் உள்ளதாகப் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் சகல வலயங்களுக்கும் அனுமதிக்கப்பட்ட தொழிற்சங்களின் விவரங்களை அனுப்ப வேண்டும் எனவும் அவர் கோரினார்.

தேசிய இடமாற்றக் கொள்கையுடன் வடக்கு மாகாண இடமாற்றக் கொள்கை சில இடங்களில் ஒத்துச் செல்லவில்லை. இருப்பினும் வடக்கு மாகாண இடமாற்றக் கொள்கை இன்னமும் வினைத்திறனாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என வலியுறுத்திய ஆசிரிய சேவைச் சங்கத்தினர், சேவையின் தேவை கருதிய இடமாற்றங்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்களால் வழங்கப்படும்போது அது தொடர்பில் 14 நாள்களுக்குள் இடமாற்றச் சபைக்கு அறிவிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டனர். அதை நடைமுறைப்படுத்துமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்களை அறிவுறுத்தினார்.

இடமாற்றங்களின்போது அரசியல் தலையீடுகளுக்கு அனுமதியளிக்க வேண்டாம் எனக் கோரிக்கை விடுத்த ஆசிரியர் சேவைச் சங்கத்தினர் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைகளை துரிதப்படுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினர். மேலும் ஆசிரியர்களால், அதிபர்களால் திணைக்களங்களில் ஒப்படைக்கப்படுகின்ற ஆவணங்களுக்கு பெற்றுக் கொண்டமைக்கான உறுதிப்படுத்தல் கடிதம் வழங்கப்படவேண்டும் என முன்வைத்த கோரிக்கையை செயற்படுத்துவதாக கல்வி அமைச்சின் செயலர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி▼











# வடக்கில் ஆசிரியர்களுக்கான இடமாற்றத்தை தாமதமின்றி நடைமுறைப்படுத்தத் தீர்மானம்

தொடர்ச்சி▲

அதிபர் நியமனங்கள் வழங்கப்பட்டு அதனைப்பொறுப்பேற்காதவர்கள் தொடர்பான விடயமும், அதிபர் வெற்றிடங்கள் காணப்படும் நிலையில் அதனை நிரப்பும் வகையில் அவர்களை உள்வாங்குமாறும் அதிபர் சேவைச் சங்கப் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டது. அதிபர்கள் இடமாற்றக் கொள்கை தயாரிக்கும் நடவடிக்கை இடம்பெற்று வருவதாக கல்வி அமைச்சின் செயலாளர் இதன்போது தெரிவித்தார்.

வன்னிப் பிரதேசத்திலுள்ள வலயங்களிலிருந்து ஆசிரியர்கள் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் பதிலீடாக வரவேண்டிய ஆசிரியர்கள் இன்னமும் அங்கு வராமையால் எழுந்துள்ள சிக்கல்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் சுட்டிக்காட்டினார்.

இடமாற்றம் வழங்கப்பட்டவர்களை எதிர்வரும் புதன்கிழமையுடன் தற்போதுள்ள வலயங்களில் சேவையை முடிவுறுத்தி புதிய நிலையங்களில் பொறுப்பேற்பதற்கான ஒழுங்குகளை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மேற்கொள்ள வேண்டும் என ஆளுநர் வலியுறுத்தினார்.

அரசு எதிர்காலத்தில் பிரதேச மாண



வர்களின் கல்வியைப் பாதிக்காத வகையில், கொத்தணிப் பாடசாலை முறைமைய வலுப்படுத்த எதிர்பார்ப்பதாகவும், இதனூடாக அதிபர், ஆசிரியர்கள் பற்றாக்குறை தொடர்பான விவகாரத்தை தணிக்க முடியும் என நம்புவதாகவும் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க குறிப்பிட்டார்.

இதேவேளை, மாணவர்களின் கல்வியை வளர்த்தெடுப்பது தொடர்பிலேயே சிந்திக்கவேண்டும் எனவும், ஆசிரியர்கள், அதிபர்கள், அதிகாரிகள் தங்கள் சுகபோகங்களையும் வசதி வாய்ப்புக்களையும் நோக்கமாகக்கொண்டு செயற்படக்கூடாது என்றும் பிரதி அமைச்சர் பிரதீப் சுந்தரலிங்கம் கேட்டுக்கொண்டார்.

மாணவர்களின் கல்விக்காக சில விட்டுக்கொடுப்புக்களையும், கஷ்டங்களையும் ஆசிரியர்கள், அதிபர்கள், அதிகாரிகள் தாங்கிக் கொள்ளவேண்டும் எனவும், அவ்வாறில்லாவிட்டால் வடக்கு மாகாணத்தை கல்வியில் உயர்த்துவது கடினம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பாடசாலைக்கான அனுமதிகளில் சில இடங்களில் பாரபட்சம் காட்டப்படுவது தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. அவ்வாறானதொரு விடயத்துக்கு தயவுதாட்சணயமின்றி நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ பிரதியமைச்சர் மஹிந்த ஜயசிங்க கோரினார். அவ்வாறான முறைப்பாடுகள் கிடைத்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநர் இதன்போது உறுதியளித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் பொதுச் செயலாளரும் பிரதி அமைச்சருமான மஹிந்த ஜயசிங்க, இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் தேசிய அமைப்பாளரும் பிரதி அமைச்சருமான பிரதீப் சுந்தரலிங்கம், ஆசிரியர் சேவைச் சங்கத்தின் உப தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெகதீஸ்வரன் ஆகியோரும், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் க.பிரட்லி ஜெனட், வடக்கின் அனைத்து வலயங்களினதும் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.





# இளையோர் களமாகிய ஹைக்கூ கவியரங்கம்

புதிய அலை கலை வட்டத்தின் இளைஞர் அணியின் ஹைக்கூ கவியரங்கம் நேற்றுமுன்தினம் கொழும்பு -13, புதுச்செட்டித்தெருவில் அமைந்துள்ள எக்ஸலனஸ் சர்வதேச பாடசாலையில் நடைபெற்றது.

கணித ஆசிரியரும் கவிஞருமான எஸ்.அழகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த அமர்வில் இளையவர்களுடன் இணைந்து சிறியவர்களும் ஹைக்கூ பாடி அசத்தினர்.

கவிதை பாடிய அனைவருக்கும் புத்தகங்கள் வழங்கி வைக்கப்பட்டன.


















# சாணக்கியம் மிக்க மென்வலுத் தலைவர் சம்பந்தன்! அந்த வெற்றிடம் காலவெளியால் நிரப்ப முடியாதது!!

## நினைவேந்தல் நிகழ்வில் சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

“அரசியல் முதிர்ச்சியும், சாணக்கியமும், எல்லாத் தரப்பினரையும் அரவணைத்துச் செல்லும் தலைமைத்துவ ஆளுமையும் மிக்கவராக, தன் இறுதிக்கணம் வரை தமிழ்த் தேசியத் தளத்தில் பயணித்த அரசியல்வாதியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமாகிய அமரர்.இராஜவரோதயம் சம்பந்தனின் வெற்றிடம், ஈழத்தமிழர்களின் இனவிடுதலை நோக்கிய அறவழிப் போராட்டப் பயணத்தில் காலவெளியால் நிரப்ப முடியாத வெற்றிடம்.”

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி கிளிநொச்சி மாவட்டக் கிளையினால் கட்சியின் மாவட்டக் கிளைப் பணிமனையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் அமரர் இரா.சம்பந்தனின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட அஞ்சலி நிகழ்வில் அன்னாரது திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து, நினைவுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன்னின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கரைச்சி பிரதேச சபையின் மேனாள் உறுப்பினரும் ஆசிரியருமான அருணாசலம் சத்தியானந்தம், கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை உப தலைவரும் மேனாள் வடக்கு மாகாண கல்வி அமைச்சருமான தம்பிராஜா குருகுலராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகியோர் நினைவுரைகளை ஆற்றியிருந்ததுடன், மாவட்டக் கிளையின் செயலாளர் வீரவாகு விஜயகுமார், கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உப தவிசாளர்கள், உறுப்பினர்கள், மேனாள் உறுப்பினர்கள், மாவட்டக் கிளை உறுப்பினர்கள் மற்றும் வட்டாரக் கிளைகளின் நிர்வாக உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.















# மக்கள் மீது அக்கறை உள்ளவர்கள்போல் சில நடிகர்கள் காட்டிக்கொள்கின்றார்கள்

## விஜய் போராட்டத்தை விமர்சித்தார் கனிமொழி எம்.பி

சில நடிகர்கள் மக்கள் மீது அக்கறை உள்ளவர்கள்போல் காட்டிக் கொள்கிறார்கள் என்று த.வெ.க. தலைவர் நடிகர் விஜய்யை மறைமுகமாக தி.மு.க. மகளிரணி செயலாளரும். எம்.பி.யுமான கனிமொழி குற்றம் சாட்டியுள்ளார்.

திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட அம்பாசமுத்திரம், நாங்குநேரி, ராதாபுரம் ஆகிய 3 சட்டப் பேரவை தொகுதிகளின் தி.மு.க. பாக முகவர்கள் கூட்டம் திருநெல்வேலி அருகே செங்குளத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய கனிமொழி,

"தி.மு.க. பல போராட்டங்களைக் கடந்து இந்த நிலைக்கு வந்துள்ளது. டில்லியில் இருப்போருக்கு சிம்ம சொப்பனமாகவும், பா.ஜ.கவின் அடக்குமுறைகளை எதிர்த்து கேள்வி கேட்கக் கூடியவராகவும் தமிழக முதல்வர் இருக்கிறார். அவரை தலைவராக கொண்டுள்ள இயக்கத்தை நாம்



பெற்று இருக்கிறோம். இந்த நாடே நம்மை பார்த்து பிரம்மிக்கக் கூடிய ஒரு போர் குணத்தோடு திமுக இருந்து கொண்டிருக்கிறது.

தமிழகத்துக்கு கொடுக்க வேண்டிய நிதியை கொடுக்காமல் இருந்து வருகிறது. தமிழகம் வளர்ந்த மாநிலமாக மாறிவிடக்கூடாது அதனை முடக்க வேண்டும் என மத்திய அரசு செயல்பட்டு வருகிறது. ஆனால், அத்தனை சவால்களையும் தாண்டி ஒரு சிறப்பான ஆட்சியை தமிழக முதல்வர் கொடுத்து வருகிறார். 'அட்மினிஸ்ட்ரேஷன்' என்றால் என்ன, ஆட்சி அதிகாரம் என்றால் என்ன என்று தெரியாமல் புதிதாக வந்து எதை வேண்டுமானாலும் பேசி வருபவர்களால் தமிழகத்தில் சிறப்பான ஆட்சி செய்ய முடியாது." என்றார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய கனிமொழி,

"ஒரு திரைப்படம் மக்களுக்கு பல செய்திகளை சொல்லக்கூடிய ஒன்றாக இருக்கிறது. சில நடிகர்கள் சினிமாவில் நடிக்கும்போது 'லொக்-அப்' மரணங்களுக்கு ஆதரவாக செயல்பட்டுவிட்டு அரசியல் கட்சி தொடங்கியவுடன் மக்கள் மேல் அக்கறை இருப்பதைப்போல் காட்டிக்கொள்கிறார்கள். இது நகைச்சுவையாக பார்க்கப்படுகிறது. அவர்கள் இப்போது 'லொக்-அப்' மரணங்களுக்கு எதிராக பேசுகிறார்கள்.

தி.மு.க. கூட்டணி மிகவும் பலமாக இருக்கிறது. அதே நேரத்தில் ஓரணியில் தமிழ்நாடு என்ற அடிப்படையில் மக்களோடு தமிழக முதல்வர் கூட்டணி அமைக்கிறார். அதுவும் மிகச் சிறப்பாக சென்று கொண்டிருக்கிறது." என்று தெரிவித்தார்.

# இளையராஜா தொடர்ந்த வழக்கில் வனிதாவை பதிலளிக்க உத்தரவு

இசையமைப்பாளர் இளையராஜா தொடர்ந்த வழக்கில் நடிகை வனிதா விஜயகுமார் பதிலளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் இசையமைப்பாளர் இளையராஜா தாக்கல் செய்த மனுவில்,

"நடிகை வனிதா விஜயகுமார், நடன இயக்குநர் ரொபர்ட் உள்ளிட்டோர் நடித்துள்ள திரைப்படம் 'மிசஸ் அண்ட் மிஸ்டர்'. இந்தப் படத்தில் எனது இசையில் வெளிவந்த 'மைக்கேல் மதன காமராஜன்' படத்தில் இடம்பெற்ற. 'சிவராத்திரி' பாடல் அனுமதியின்றி பயன்படுத்தப்பட்டுள்ளது. இது காப்புரிமை மீறிய



செயலாகும்" என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கு திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது இளையராஜா தரப்பில், 'மிசஸ் அண்ட் மிஸ்டர்' படத்தில் அனுமதியின்றி தனது பாடலை பயன்படுத்தியதோடு, அந்தப் படத்தின் விளம்பரங்களில் தனது பெயரும் அனுமதியின்றி பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே அதற்கும் தடை விதிக்க வேண்டும் என வாதிடப்பட்டது.

அப்போது வனிதா விஜயகுமார் தரப்பில், சம்பந்தப்பட்ட பாடலை, எக்கோ நிறுவனத்தின் அனுமதியைப் பெற்று பயன்படுத்தியதாகவும், மனுதாரருக்கும் எக்கோ நிறுவனத்துக்கும் இடையேயான காப்புரிமை தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, இளையராஜா தொடர்ந்த வழக்கில் வனிதா விஜயகுமார் ஒரு வாரத்தில் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

# எம்.எல்.ஏக்கள் மீதான ஊழல் வழக்கு விவரங்களை வழங்க உத்தரவிடுமாறு கோரி த.வெ.க. மனு தாக்கல்

தமிழகத்தில் உள்ள எம்.பி, எம்.எல்.ஏக்கள் மீதான ஊழல் வழக்கு குறித்த விவரங்களை வெளியிட மாநில தகவல் ஆணையருக்கு உத்தரவிடக் கோரி தமிழக வெற்றிக் கழகம் சார்பில் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், தவெக சென்னை மண்டல வழக்கறிஞர் பிரிவு இணை செயலாளர் ஆதித்ய சோழன் தாக்கல் செய்த மனுவில், "தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ், தமிழக லஞ்ச ஒழிப்புத் துறையிடம் தமிழகத்தின் முன்னாள், இந்நாள் எம்..பி- எம்.எல்.ஏக்கள் மீதான ஊழல் வழக்குகள் குறித்த விவரங்களை வழங்கக்கோரி கடந்த ஆண்டு நவம்



பர் மாதம் விண்ணப்பித்தேன்.

மேலும், அவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளின் நிலை குறித்த விவரங்களை வழங்க வேண்டும் எனக் கோரியிருந்தேன். எனது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இதனை எதிர்த்து மாநில தகவல் ஆணையத்தில் மேல்முறையீடு செய்தேன். ஆனாலும், நான் கேட்ட தகவல்கள் எதுவும் வழங்கப்படவில்லை .பொது மக்கள் நலன் கருதி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட தகவல்களை தர மறுப்பது அடிப்படை உரிமையை மீறும் செயல். எனவே எனது கோரிக்கை தொடர்பான விவரங்களை வழங்க மாநில தகவல் ஆணையருக்கு உத்தரவிட வேண்டும்." என மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மருத்துவப் பணியாளர்கள் 360 பேர் காசாவில் கைது

காசாவில் குறைந்தது 360 மருத்துவப் பணியாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

போர் தொடங்கியதிலிருந்து குறைந்தபட்சம் 360 மருத்துவ பணியாளர்கள் இஸ்ரேலால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் துயரமான மற்றும் கடுமையான சூழ்நிலையில் வாழ்கின்றனர் என்றும் காசாவின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் மருத்துவர்களும் அடங்குவதாக கூறப்படுகிறது. இதனால் ஆயிரக்கணக்கான காயமடைந்த பாலஸ்தீனியர்களுக்கு மருத்துவ வசதி கிடைப்பது மேலும் தடைபட்டுள்ளது என்று அமைச்சகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சிறையில் அடைக்கப்பட்ட மருத்துவ ஊழியர்களுக்கு எதிரான ஆக்கிரமிப்பு நடைமுறைகளை குற்றமாக்குவதற்கும் அவர்களின் விடுதலைக்கு அழுத்தம் கொடுப்பதற்கும் அவசர சர்வதேச தலையீட்டிற்கு சுகாதார அமைச்சகம் அழைப்பு விடுத்துள்ளது.



இதன்படி, 2023 ஒக்டோபரில் போர் தொடங்கியதிலிருந்து காசா முழுவதும் குறைந்தது 1,400 சுகாதார மற்றும் மருத்துவ ஊழியர்களை இஸ்ரேலிய இராணுவம் கொன்றுள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.







# காஸாவில் ஏவுகணை தாக்குதல்; சிறுவர்கள் பலர் உயிரிழப்பு

காஸாவில் இஸ்ரேல் நடத்திய ஏவுகணை தாக்குதலில் சுமார் 34 பேர் உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் 20 சிறார்கள் அடங்குகின்றனர் என காஸா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தொழில்நுட்ப பிரச்சினையே, இந்த ஏவுகணை தாக்குதலுக்கு காரணம் என்று இஸ்ரேல் கூறியுள்ளது.

ஏதிலிகள் தங்கியிருந்த முகாமுக்கான நீர் விநியோக பகுதியிலேயே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.





# 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இராணுவத்தில் பணியாற்ற வேண்டும்

## கம்போடியாவில் புதிய சட்டம்

கம்போடியாவில் 18 வயது நிரம்பிய அனைவரும் இராணுவத்தில் பணியாற்றுவது கட்டாயம் என்ற சட்டம் அடுத்தாண்டுமுதல் நடைமுறையாகவுள்ளது. இந்த உத்தரவை கம்போடிய அரசு நேற்று திங்கள்கிழமை பிறப்பித் துள்ளது.

நாட்டின் பாதுகாப்பு காரணங்களைக் கருதி எடுக்கப்பட்டுள்ளதொரு முக்கிய நடவடிக்கை இது என தெரிவிக்கப்படகிறது. இதன்படி 18 - 30 வயது வரையுள்ள மக்கள் 18 மாதங்கள் இராணுவத்தில் கட்டாயமாக பணியாற்ற வேண்டும்.

கம்போடியாவுக்கும் அதன் அண்டை நாடான தாய்லாந்துக்கும் இடையே மோதல் போக்கு நிலவுகிறது. இருநாட்டு எல்லையில் அண்மையில் நிகழ்ந்த சண்டையில் கம்போடிய இராணுவ வீரர் ஒருவர் கொல்லப்பட்டார். இதையடுத்து, நாட்டின் பாதுகாப்பு காரணங்களைக் கருதி எடுக்கப்பட்டுள்ளதொரு முக்கிய நடவடிக்கையாக இந்த புதிய உத்தரவு பார்க்கப்படுகிறது.

அதன்படி, கடந்த 2006 ஆம் ஆண்டில் கம்போடிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 'கட்டாய இராணுவப் பணி சட்டம்' 2026 முதல் நடைமுறையாவதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 15.07.2025




சில செயல்களில் தாமதங்கள் காணப்படும். பதற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களை அமைதிப்படுத்தும்.

உங்கள் முக்கியமான பணிகளை முடிக்க இயலாது. தாமதங்கள் ஏற்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்கத் திட்டமிட வேண்டியது அவசியம். இன்று நீங்கள் உங்கள் துணையை திருப்திபடுத்த இயலாது. உங்களால் முடிந்த அளவு இனிமையாகப் பேசி நிலைமையை சீராக்குங்கள்.

இன்று அதிர்ஷ்டம் குறைவான நாள். பணப்புழக்கம் காணப்பட்டாலும் தேவையற்ற செலவுகள் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படாது. தூக்கமின்மை காரணமாக இன்று ஆரோக்கியம் குன்றி காணப்படும்.




இன்று உங்களுக்கு மிகவும் அமைதியான நாளாக அமையும்.சௌகரியமான நாளாக அமையும்.திருப்தியுடன் காணப்படுவீர்கள்.நீங்கள்பெரிதாக எதையோ சாதித்தது போன்று உணர்வீர்கள்.

நீங்கள் உங்கள் பணியில் இன்று இரகசியத்தை காப்பீர்கள்.நீங்கள் பணியாற்றும் முறை உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று உங்கள் துணையுடன் இருப்பதை சொர்கத்தில் இருப்பது போல உணர்வீர்கள். இன்று மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்வீர்கள். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.




இன்று மகிழ்ச்சியாக இருப்பதற்கு உற்சாகமானதாக எதுவும் காணப்படாது. நீங்கள் குழப்பத்துடன் காணப்படுவீர்கள். நீங்கள் எடுத்த முடிவு தவறாக முடியும்.

பணியில் வளர்ச்சி குறைந்து காணப்படும்.பணிச்சுமை அதிகமாக இருக்கும். பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் உறவாடும் போது சில சிக்கல்கள் காணப்படும். இது இன்றைய நாளின் இனிமையை பாதிக்கும்.

இன்று நிதி வளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. உங்களிடம் இருக்கும் ஒவ்வொரு பணத்தையும் சேமிக்க வேண்டும்.

தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உருவாகலாம்.




இன்று மகிழ்ச்சி குறைந்து காணப்படும். குறைந்து காணப்படும் தன்னம்பிக்கையை அதிகரித்துக் கொள்ளுங்கள். சில புத்திசாலித்தனமான திட்டமிடல் வெற்றியின் உச்சத்தை அடைய வழிகாட்டும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணிகளை திட்டமிட்டு கவனமுடன் ஆற்றுவதன் மூலம் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ளாலாம்.

உறவில் நல்லிணக்கத்தைப் பராமரிக்க உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

எதிர்பாராத வகையில் பண இழப்பு ஏற்படலாம். செலவுகளை கட்டுபடுத்த வேண்டும். பணத்தைக் கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் தாயாரின் சிறிய உடல் நிலை பிரச்சினை ஒன்றிற்காக பணம் செலவு செய்ய நேரலாம்.




இன்று திருப்தியான பலனை பெறுவதற்கு உங்கள் மனதை அமைதியாக வைத்திருக்க வேண்டியது அவசியம். உங்கள் தன்னம்பிக்கையை இழக்காதீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும்.எதிர்பார்ப்புடன் நன்மை தீமைகளை ஆலோசித்து அதன்படி பணியாற்றுவது நல்லது.

உங்கள் துணையைப் புரிந்து கொண்டு அவரின் விருப்பங்களை பூர்த்தி செய்ய வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கையாள்வதில் கவனம் தேவை.

இன்று பதற்றத்துடன் காணப்படுவீர்கள். அதனால் தோள்களில் வலிகள் ஏற்படலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.இன்று கூடுதல் பலன்கள்கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு இன்று திட்டமிடலாம்.

நீங்கள் ஆற்றும் பணியில் வளர்ச்சியைக் காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். கடமை உணரச்சி மற்றும் சேவை மனப்பான்மையுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஒரு விழா குறித்து உங்கள் துணையுடன் இணைந்து திட்டமிடுவீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். அதனை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்கும்.




இன்று மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.இது உங்கள் செயலிலும் எண்ணத்திலும் வெளிப்படும்.தியானம் மேற்கொள்வதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

புதிய வேலைவாய்ப்புக்கான சாத்தியம் உள்ளது.இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணி செய்வதற்கான சாதகமான நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக உங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பண வளர்ச்சி அதிகமாக காணப்படும். சேமிப்பு திட்டங்களில் சேர்வதன் மூலம் நீங்கள் உங்கள் பணத் தேவைகளை மேம்படுத்தலாம்.

உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




உங்கள் எதிர்மறை எண்ணத்தை வெளிப்படுத்துவீர்கள்.அதனை தவிர்ப்பது நல்லது. இல்லையெனில் முன்னேற்றம் காண்பது அரிது. யதார்த்தமான அணுகுமுறை தேவை.

உங்கள் பணியில் தவறுகள் நேரலாம்.இதற்கு உங்களின் கவனக் குறைவே காரணமாக இருக்கும். இதை நீங்கள் தவிர்ப்பது நல்லது. திறமையான முறையில் ஒழுங்கமைத்து பணியாற்றினால் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையிடம் அன்பைக் கொடுத்து அன்பைப் பெறுதல் என்ற கருத்துடன் இன்று பழகுவது நல்லது. இதனால் மகிழ்ச்சி நிலவும்.

உங்கள் பொறுப்புகள் அதிகரித்து காணப்படும். இன்று இதனை தவிர்க்க முடியாது.

# இன்றைய ராசி பலன்கள் - 15.07.2025




உங்கள் மனதை இன்று தியானம் மேற்கொள்வதன் மூலம் ஓய்வாக வைத்துக் கொள்ள முடியும்.நீங்கள் எதையோ இழந்தது போல உணர்வீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் மனதில் காணப்படும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். அதனால் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள் பணிகளை ஒழுங்கமைத்து பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் உங்களின் ஈகோ உணர்வை வெளிபடுத்தாதீர்கள். நட்புடன் அணுகுங்கள்.

திடீர் செலவுகள் எதிர்கொள்ள நேரலாம். சேமிப்புக்கென்று சிறிது பணத்தை ஒதுக்குவதற்கு முயற்சி செய்வது நல்லது.செரிமானக் கோளாறுகள் ஏற்படலாம். எனவே உணவு முறையில் கவனம் தேவை. நீரை அதிகமாகப் பருகவும்.




இன்று மிகுந்த ஆற்றல் காணப்படும். வெற்றி பெற வேண்டும் என்ற உறுதி உங்களிடம் இருந்தால் இன்றை நாள் உங்களுக்கானது. சுய திட்டமிடல் மற்றும் புத்தி சாலித்தனம் மூலம் உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

பணிநிமித்தமான பயணங்களுக்கு வாய்ப்பு உள்ளது. வெற்றி பெறுவதற்கு கடின உழைப்பு தேவை.

நீங்கள் இருவரும் தகுந்த பொருத்தமுடையவர்கள். உங்கள் துணையிடம் நேர்மையுடன் நடந்து கொள்வீர்கள்.எதிர்பாராத வகையில் பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது. பூர்வீகச் சொத்து கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று நீங்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.உங்கள் நலனை மேம்படுத்தும் பயனுள்ள முடிவு களுக்கான திட்டங்களை மேற்கொள வீர்கள். எந்தச் செயலாக இருந்தாலும் அதை எளிதில் செய்து முடிப்பீர்கள்.

பிறர் பார்த்து பின்பற்ற முடியாத பாணியில் பணியாற்றுவீர்கள். உங்களின் இந்த தனிப்பட்ட அணுகுமுறை உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெற்றுத் தரும்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். நீங்கள் ஒருவருக்காக மற்றவர் என்பது போல ஒருமித்த உணர்வுடன் காணப்படுவீர்கள்.இன்று சுதந்திரமான நிதிநிலைமையுடன் காணப்படுவீர்கள்.





நீங்கள் விருந்துகள் மற்றும் ஆன்மீகச் சொற்பொழிவுகளில் கலந்து கொண்டு இன்றைய நாளை பயனுள்ளதாக ஆக்குவீர்கள். நீங்கள் மனதுக்கு ஆறுதல் அளிக்கும் பிரார்த்தனையில் ஈடுபடுவீர்கள்.


பணியில் பதற்றம் காணப்படும். பணியிடத்தில் காணப்படும் சூழ்நிலையை அனுசரித்து நீங்கள் செயல்பட வேண்டும். அதற்கேற்றால் போல பணிகளை திட்டமிட வேண்டும்.


இன்று நீங்கள் பதற்றத்துடனும் உணர்ச்சி வசப்பட்டும் காணப்படுவீர்கள். இதனை தவிர்த்து உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும்.பண இழப்புக்கான வாய்ப்புகள் உள்ளது. இன்று பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்ய வேண்டியது அவசியம்.

# பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு விசாரணைக்கு தம்பலகாமம் இளைஞருக்கு அழைப்பாணை










(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை தம்பலகாமம் பகுதியைச் சொந்த இடமாகக் கொண்ட கணேசலிங்கம் சிந்துஜன் (வயது35) என்ற அரசியல் மற்றும் சமூக செயற் பாட்டாளருக்கு இன்று பயங்கரவாத தடுப்பு பிரிவுக்கு விசாரணைக்கு வருமாறு அழைப்பாணை நேற்றைய தினம் வழங்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு தியாகி திலீப னின் நினைவேந்தல் ஊர்தி திருகோணமலை நகருக்கு வருகை தரும் பொழுது அதன் மீது சர்தாபுரம் என்ற இடத்தில் வைத்து சிங்களக் காடையர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் போது பாதிக்கப்பட்ட நபரே விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். மேலும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கடந்த நாடாளுமன்றத் தேர்தல் வேட்பா ளராகவும் இவர் களமிறங்கி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தியாகி திலீபனது ஊர்தி தாக்கப்பட்ட விவகாரத்தில் வழக்கு முறையற்ற விதத்தில் இடம்பெற்றிருந்தமையும், தாக்குதல் மேற்கொண்ட நபர்கள் முறையற்ற விதத்தில் விடுதலை செய்யப்பட்டமையும் பல்வேறுபட்ட தரப்புகளாக கண்டிக்கப்பட்ட நிலைமை யில், பாதிக்கப்பட்ட தரப்பினரை மீண்டும் துன்புறுத்தும் வகையிலான செயற் பாடுகளை மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

தற்போது ஆட்சி பீடத்தில் உள்ள அரசாங்கம் தங்களுடைய முன்னாள் போராளிகளை நினைவேந்தும் உரிமை யினை நிலை நிறுத்தி உள்ள நிலை யில், தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமைகள் மாத்திரம் மறுக்கப்பட்டு வருவது சமூக செயற்பாட்டாளர்களால் கண்டிக்கப்படுகின்றது.